# யாழ் இந்து ஆரம்ப பாடசாலை
# பரிசுத்தினம் - 2005

## அதிபர் அறிக்கை

பிரதம விருந்தினர் :
**திருவாளர் வீரவாகு கணேசராசா**
B.Com. Dip in Edu, SLPS. I
அதிபர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

# PRIZE DAY - 2005
## PRINCIPAL' S REPORT

*CHIEF GUEST:*
*Mr. Veeravaku Ganasarasa*
***B. Com, Dip in Edu, SLPS - I***
***Principal, Jaffna Hindu College.***

***J/ Jaffna Hindu Primary School***
***2005-12-10***

# நிகழ்ச்சி நிரல்

- கொடியேற்றல்
- மங்கள விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- அக வணக்கம்
- தமிழ்த்தாய் வாழ்த்து
- வரவேற்புரை – *திருமதி ந். கிருஷ்ணபாலா*
  ஆசிரியை அவர்கள், பகுதித்தலைவர்
- ஆசியுரை – *சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள்*
- அதிபர் அறிக்கை
- மாணவர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- பரிசில் வழங்கல்
- நன்றியுரை – *திரு. சு. தியாகலிங்கம் அவர்கள்*
  பிரதி அதிபர்
- பாடசாலைக் கீதம்

# ஆசியுரை

அருளும், அன்பும் அறிவும் இணைந்து நிற்கும் இடம் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை. ஆதலால் ஆலயமும் பாடசாலையும் அருகருகே அமைந்து தெய்வீகத் தன்மையைத் தரிசனமாக்கி விளங்கிக் கொண்டிருக்கிறது.

இத்தகைய புனிதம் வாய்ந்த சந்நிதானத்திலே புகழ் பூத்த மாணவமணிகள் அறிவை வளம்படுத்திக் கொள்கின்றனர். சைவச்சிறார்கள், சைவப் பாரம்பரியப் பண்பில் கல்வியைப் பெறும் வாய்ப்பு இங்கு கிடைத்திருப்பது சைவ அன்பர்களுக்கு ஒரு வரப் பிரசாதமாகும்.

கொண்டலடி விநாயகப் பெருமானின் திவ்விய கடாட்சம் மீதூரப் பெற்று இவ் வாரம்ப பாடசாலையை வளம்படுத்தவெனத் துடித்து நிற்கும் அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலைச் சமூகத்தினர் ஆகிய அனைவருக்கும் அன்பும், அருளும், பேறும் பெருக எமது நல்லாசிகளை நல்குவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

யாழ்ப்பாணம்

சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக்குருக்கள்,
பிரதமகுரு, கொண்டலடி விநாயகர் தேவஸ்தானம்,

# பரிசுத் தினம் – 2005
# அதிபர் அறிக்கை

கொண்டலடி விநாயகப் பெருமானது பாதார விந்தங்களைப் பணிந்து,
பிரதம குரு சிவஸ்ரீ நா. பாலசுப்பிரமணியக் குருக்கள் அவர்களே!
இன்றைய பரிசுத்தின நன்னாளிலே பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண் டிருக்கும் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபர்
கௌரவ வீரவாகு கணேசராசா அவர்களே!
யாழ். கல்வி வலயக் கல்விப்பணிப்பாளர் அவர்களே!
பிரதிக் கல்விப் பணிப்பாளர்களே!
நல்லூர்க் கல்விக் கோட்ட கல்விப்பணிப்பாளர் திரு. கே. வி. குணசேகரம் அவர்களே!
உதவிக் கல்விப் பணிப்பாளர்களே!
நிர்வாகப் பணி உயரதிகாரிகளே!
முதன்மையாசிரியர்களே!
இப்பாடசாலையின் முன்னாள் அதிபர்களே! ஆசிரியர்களே!
பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் கௌரவ செயலாளர் அவர்களே!
உறுப்பினர்களே!
கல்வி மேம்பாட்டுப் பேரவை உறுப்பினர்களே!
பழைய மாணவர் சங்க கௌரவத் தலைவர் அவர்களே!
உறுப்பினர்களே!
சகோதர பாடசாலை அதிபர்களே!
அன்பார்ந்த பிரதி அதிபர் அவர்களே! பகுதித் தலைவர்களே! ஆசிரியத் திலகங்களே! பெற்றோர்களே! நலன்விரும்பிகளே!
மாணவச் செல்வங்களே!

உங்கள் அனைவரையும் அன்பு கூர்ந்து, நெஞ்சில் இருத்தி வருக வருகவென வரவேற்று, யாழ். இந்து ஆரம்ப பாடசாலையின் 2005 ஆம் ஆண்டிற்கான பரிசுத்தின அதிபர் அறிக்கையை உங்கள் முன்வைப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**பிரதம விருந்தினர் அவர்களே!**

அன்பும் பண்பும் அமைதியும் ஆற்றலும் இலக்கும் மிக்க தாங்கள் இந்துக்களின் மரபுவழிப் பேருடைய புகழ்புத்த யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் அதிபராகக் கடமைப் பொறுப்பேற்றிருப்பது கண்டு அதன் ஆரம்பக் கூடமாக விளங்கும் எமது பாடசாலை தங்களை வரவேற்றுப் பூரித்துப் பெருமை கொள்கின்றது.

நற்றவம் மிக்க நயினைப் பதியில் நாளும் அன்னையின் அடிபரவிப் போற்றும் அற்புதக் கொழுந்தாக 07.08.1954 இல் பிறந்த வீரவாகு கணேசராசா ஆகிய தாங்கள் ஆரம்பக் கல்வியை நயினாதீவு ஸ்ரீநாகபூஷணி வித்தியாசாலையிலும், இடைநிலைக் கல்வியை நயினாதீவு மகாவித்தியாலயத்திலும் கற்றீர்கள். கல்வி கற்ற காலங்களில் யானும் தங்கள் பின்னவராகக் கல்வியைத் தொடர்ந்து வந்துள்ளேன். அக்காலத்திலும் கல்வியிலும் விளையாட்டிலும் கலைத்துறையிலும் சமூகத் துறையிலும் காட்டிய வெற்றிச் சாதனைகள் அவ்வூரின் சிறந்த சிற்பி ஒருவரின் எழுச்சிக்குக் கால்கோள் பதித்து நின்ற நினைவுகளை ஒருகால் மனம் பதித்து நினைத்து நிற்கின்றேன்.

1971 இல் உயர்கல்வியை நாடி யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியினுள் நுழைந்த போது தங்கள் வாழ்க்கையின் உயர்வில் புதிய தசாப்தம் உருவானது எனலாம். வர்த்தகத் துறையில் செறிவுமிக்க ஆற்றலால் உயர்ந்து நின்றவேளை பண்பாட்டிலும் பணியிலும் பலரின் நட்பும் ஆசிரியர்களின் ஒத்தாசையான மதிப்பிற்கும் உரித்தாகியிருந்தீர்கள்.

இந்துக் கல்லூரியில் இருந்து பேராதனைப் பல்கலைக்கழகத்தில் நுழைந்த தாங்கள் வர்த்தகமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டீர்கள்.

பட்டம் பெற்றுக் கொண்டதன் பின் 1976 - 1981 வரை கொழும்பு உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திலும், பேராதனை விவசாயத் திணைக்களத்திலும் எழுதுவினைஞராகக் கடமையாற்றியதன் நிமித்தம் நிர்வாகத்துறை சார்ந்த பயிற்சியையும் அனுபவத்தையும் பெற்றுக் கொண்டீர்கள்.

1981 தொடக்கம் மன் / புனித சபேரியார் ஆண்கள் கல்லூரியில் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற்று இணைந்து கொண்ட தாங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டப்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தைப் பெற்று ஆசிரிய சேவை வாண்மை விருத்தியுடன் கற்பித்தல் தேர்ச்சியும் நேர்த்தியும் மிக்கவராக மாணவர் கல்வி விருத்தியில் செயலாற்றி நின்றீர்கள்.

01.06.1989 தொடக்கம் பரீட்சை மூலம் உயர் பெறுபேற்றினைப் பெற்றுக் கொண்டதன் மூலம் இலங்கை அதிபர் சேவை தரம் 1 பதவியைப் பெற்று மன் / பெரியமடு ம.வி., யா / ஆனைக்கோட்டை றோ. க. த. க. பாடசாலையிலும் அதிபராக இளம் வயதிலே தனது செயலாற்றுகையைக் காட்டியதன் மூலம் யா/நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரியின் அதிபராகவும், கொத்தணி அதிபராகவும் தரம் உயர்த்தப்பட்டீர்கள். தொடர்ந்து செட்டிகுளம் கல்விக் கோட்டப் பணிப்பாளராகவும், வவுனியா கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் வளர்பிறைபோல் வளர்ந்து வரும் தங்களின் சேவை கல்வி தந்து ஆளாக்கி விட்ட யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் புகழ்பூத்த அதிபராகச் சேவையை அலங்கரிக்க 21.11.2005 இல் கால் பதித்துள்ளீர்கள்.

வவுனியா மாவட்டத்தில் சாரணர் இயக்கத்தின் ஆணையாளராக விளங்கும் தாங்கள் சமூக ஒழுங்கு, ஒத்திசைவு, வழிகாட்டல், தீர்க்கமான இலக்கு ஆகிய நல்லிணக்க சிந்தையுடன் இந்துவின் மைந்தனென

ஒளிவீசவும் அத்தகைய பண்பிற்குரிய கரங்களால் பரிசில்களைப் பெற்றுக் கொள்ளும் எமது மாணவச் சிறார்களின் கல்வி எழுச்சிப் பேறாகவும் வாய்ப்புக்களை நல்கிய பெருமானுக்கு நன்றி கூறுகின்றேன்.

**கல்விப் பணியில் கருத்தூன்றி நிற்கும் உத்தியோகத்தர்களே!**

எமது பாடசாலையின் திட்டமிடல் கல்வி அபிவிருத்தி, மேற்பார்வை, வளப் பங்கீடு, நிதிமுகாமைத்துவம், பௌதிக முகாமைத்துவம் ஆகிய பல்வேறு துறைகளையும் மேற்பார்வை செய்தும், ஆலோசனை வழங்கியும் ஒழுங்படுத்தியும் வளப்படுத்த உதவி நல்கிய யாழ்ப்பாணக் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதிக்கல்விப் பணிப்பாளர், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்வி பணிப்பாளர், பாடத்துறை சார்ந்த ஏனைய உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலைக் கட்டிடப் பகுதிப் பொறியியலாளர், உத்தியோகத்தர்கள், முதன்மை ஆசிரியர்கள் திணைக்கள உத்தியோகத்தர்கள் அனைவருக்கும் இப்பாடசாலைச் சமூகத்தின் சார்பில் மனம் நிறைந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கல்விச் சேவையில் ஊக்கிகளாக இருந்து சேவையின் நிறைவில் ஓய்வு பெற்ற கல்வியாளர்கள்:**

1. *திருமதி கமலா சுப்பிரமணியம்*
   உதவிக்கல்விப் பணிப்பாளர். (ஆரம்பக் கல்வி)
2. *திருமதி சத்தியலக்ஷமி காங்கேயன்*
   கோட்டக் கல்விப் பணிப்பாளர்.
3. *திருமதி கலாவதி பிரகதீஸ்வரன்*
   முதன்மையாசிரியர்

ஆகியோரின் சேவையால் இப்பாடசாலை பெற்ற பயனையும், அனுபவத்தையும் நினைவு கூர்ந்து அவர்களின் ஓய்வுக்காலம் மகிழ்ச்சியும் குதூகலமும் பொலிந்து நீடு வாழப் பிரார்த்தித்து நிற்கின்றேன்.

இவ்வாண்டில் யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் புதிய கல்விப்பணிப்பாளராக பதவியேற்றுள்ள திருவாளர் வே.தி.செல்வரத்தினம் ஐயா அவர்களை கல்விப்பணி சிறக்க மனமுவந்து வரவேற்கின்றோம்.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி இடமாற்றம் பெற்று வலிகாமம் கல்வி வலயக் கல்விப் பணிப்பாளராகக் கடமை ஏற்றுள்ள திரு. ப. விக்கினேஸ்வரன் அவர்களின் சேவையை என்றென்றும் நினைவு கூறுகின்றோம்.

**புதிதாக வருகை தந்த ஆசிரியர்கள்:**

*திருமதி சு. சாந்தி,*
*திருமதி ப. சரவணபவானந்தன்*
கல்விக் கல்லூரி. ஆசிரியர்கள்
*செல்வி நவப்பிரியா*
*திரு. அன்ரன்வூறனோ*

அவர்களையும் மனமுவந்து வரவேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றோம்.

**பரிசில் அன்பளிப்பு:**

எமது பாடசாலை மாணவர்களின் வருடாந்த பரிசுத்தின வைபவத்தில் மாணவர்களுக்கான இறுவட்டு பரிசில்களை உதயன் பத்திரிகை நிறுவன இயக்குநர் திரு. ஈ.சரவணபவன் அவர்கள் தமது அன்புத் தந்தையார் அமரர் **இளையதம்பி ஈஸ்வரபாதம்** அவர்களின் ஞாபகார்த்தப் பரிசாக அள்ளி வழங்கியுள்ளார். 775 மாணவர்கள் இம்முறை பரிசில் பெறுகின்றார்கள். பரிசில்களின் எண்ணிக்கை அதிகரித்த போதும் ஞாபகார்த்த அன்பளிப்புக்களை நிறைந்த மனத்தோடு உரிய காலத்தில் தாராளமாக வழங்கி வருகின்றார்கள். இப்பரிசில்கள் யாவும் மாணவச்

செல்வங்கள் பெறுகின்ற வெற்றிப் பதக்கங்களாக அணி செய்து கொண்டு இருக்கின்றன. இப்பேருதவிகளை புரிந்து வரும் உதயன் பத்திரிகை நிறுவனத்தினருக்கும், விசேடமாக அதன் இயக்குநர் திருவாளர் ஈ. சரவணபவன் அவர்களுக்கும், அவர் குடும்பத்தினருக்கும் யாழ். இந்து ஆரம்ப பாடசாலை சமூகத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் இப்பரிசில் இணைந்து கொண்ட பெற்றோர்களுக்கும் எனது பாராட்டுகளும் நன்றிகளும் உரித்தாகுக.

மேலும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களுக்கும் கு. வி. அச்சக உரிமையாளர் **அமரர் அமிர்தலிங்கம் துரை** அவர்களின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் திரு. செ. ஜெயபாலசிங்கம் அவர்கள் வழங்கி வருகிறார். அவர்களின் அளப்பரிய கருணையைப் போற்றி நிற்கின்றோம்.

**முகாமைத்துவக் கட்டமைப்பு:**

1. **அதிபர்** — திரு. வே. ஞானகாந்தன், பெருங்காப்பாளர்
2. **உபஅதிபர்** — திரு. சு. தியாகலிங்கம், காப்பாளர், நிதி நிர்வாகம்

**கட்டொழுங்கு**, **தமிழ் மன்றம்**, **இந்து மன்றம்**, **ஆங்கில மன்றம்** } காப்பாளர்

**பகுதித் தலைவர்கள்:**

1. திருமதி ஹீ. கிருஸ்ணபாலா — கலைத்திட்ட அபிவிருத்தி
2. திருமதி ல. மகாலிங்கம் — இணைப்பாட விதான அபிவிருத்தி
3. திருமதி M.P.R. கனகரட்ணம் — மாணவர் அனுமதியும், வரவுமேற்பார்வையும்.

**வழிகாட்டலும் ஆலோசனையும்:**

திரு. பொ. ஜெகானந்தராஜா

**நூலக உதவியாளர்:**

திருமதி ஓ. ஜெகதீசன்

**முகாமைத்துவ உதவியாளர்**

திருமதி சு. ஜெயரூபன்

**தர இணைப்பாளர்கள்:**

**தரம் 1** திருமதி லோ. சிவகுமாரன்
**தரம் 2** திருமதி நி. கிருபாகரன்
**தரம் 3** திரு செ. ஸ்ரீநாகேஸ்வரன்
**தரம் 4** திருமதி கா. நாகராசா
**தரம் 5** செல்வி தா. குணரஞ்சினி

**பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் - 2005:**

ஆயிரத்து மேற்பட்ட மாணவமணிகளை தன் நிழலில் அணைத்து சைவப் பண்பாடு, விழுமியங்களுக்கு ஏற்ப கல்வியில் உயர்ந்து வருதல் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

| | |
|---|---|
| மாணவர் தொகை | 1093 |
| ஆண்கள் | 681 |
| பெண்கள் | 412 |

**அதிபர், ஆசிரியர் தொகை:**

| | |
|---|---|
| அதிபர் | 01 |
| உபஅதிபர் | 01 |
| பகுதித் தலைவர் | 03 |
| வழிகாட்டலும் ஆலோசனையும் | 01 |
| முகாமைத்துவ உதவியாளர் (தற்காலிகம்) | 01 |
| ஆங்கிலம் | 02 |
| பயிற்றிப்பட்ட பட்டதாரிகள் | 04 |
| ஆரம்பக் கல்வி ஆசிரியர்கள் | 21 |
| பகுதி நேரம் (அழகியல்) | 01 |

**பாராட்டி வாழ்த்துகின்றோம்:**

2003 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் அதிபர், உபஅதிபர் இருவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கல்வி முதுமாணிப் பட்டத்தைப் பெற்றுக் கொண்டமைக்காக பாடசாலையின் ஆசிரியர் நலன்புரி கழகத்தினர் அவர்களின் வாண்மை விருத்திச் சிறப்பிற்காக இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றனர்.

**நனி சிறக்க வாழ்த்துகின்றோம்:**

எமது பாடசாலையில் தொண்டராசிய ராகத் கடமையாற்றி ஆங்கிலக் கல்வி முன்னேற்றத்திற்காக உழைத்த செல்வி கு. ஜனனி அவர்கள் இல்லற வாழ்வில் இணைந்து கொண்டமையையிட்டு அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் அனைவரும் அவர்களது வாழ்வு நனிசிறக்க அவர் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ வாழ்த்துவதில் பெருமகிழ்வெய்துகின்றோம்.

**துயருக்குள் துவண்டு நிற்கின்றோம்:**

திருமதி சி. கந்தையா ஆசிரியை அவர்கள் 1985 ஆம் ஆண்டு தொடக்கம் 2004 ஆம் ஆண்டு வரை இப்பாடசாலையில் கடமையாற்றி ஓய்வுபெற்று 2005 ஆம் ஆண்டு வைகாசி மாதம் இறைபதம் அடைந்துவிட்டார். அவர் சேவையிலிருந்து ஓய்வுபெற்று குறுகிய காலப்பகுதியில் எங்களை விட்டுப் பிரிந்தமை எங்களுக்கு மனத்துயரத்தையும் ஆழ்ந்த கவலையையும் தந்துள்ளது. அவர் இறுதி மூச்சு வரை பாடசாலை நினைவோடு இருந்தமையைக் காணக் கூடியதாகக் உள்ளது. செத்தும் கொடுத்தான் சீதக்காதி என்றது போல் எங்கள் பாடசாலைக்கு 50,000 ரூபாவை வழங்குமாறு தனது துணைவரிடம் சொல்லி வைத்ததை அவர் நினைவுபடுத்தி குறிப்பிட்ட தொகையை எங்கள் பாடசாலைக்கு வழங்கியுள்ளார். அவரின் சேவையும் நல்ல மனப்பாங்கும் எங்களால் மறக்க முடியாதது. அன்னாரின் ஆத்மா சாந்தி பெறவும் அவரின் துணைவர் நோய் துன்பமின்றி வாழவும் எல்லாம் வல்ல கொன்றலடி விநாயகரின் துணைவேண்டி நிற்கின்றோம்.

**புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள்:**

தரம் 5 மாணவர்களின் புலமைப் பரிசில் பரீட்சைப் பெறுபேறுகளே இப்பாடசாலையின் தரக் காட்டியாக உள்ளது எனலாம். அதிக எண்ணிக்கையான மாணவர்கள் இப்பரீட்சையில் சித்தி அடைவதைத் தொடர்ந்து இப்பாடசாலை மாணவர் அனுமதியில் போட்டிகள் அதிகரித்துச் சென்றவண்ணமேயுள்ளன.

வாரத்தில் மூன்று தினங்கள் மேலதிக வகுப்புக்களும், பயிற்சிகளும் வழங்கப்படுகின்றன. அத்தோடு கற்பித்த விடயம் தொடர்பான மாதிரி வினாத்தாள்கள் மாதத்திற்கு நான்கு என்ற அடிப்படையில் ஒரு வருடத்திற்குத் தொடர்ச்சியாக நடத்தி 150 புள்ளிகளுக்கு மேல் எடுக்கும் மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கி ஊக்குவிக்கப்படுகின்றனர். இதன் பிரகாரம் இவ்வாண்டு 22 பரீட்சைகளுக்கு பெற்றோர்கள் ரூபா 66000 வரை பரிசுப்பொருட்களாக வழங்கி எம் முயற்சிக்கு ஊக்கமளித்துள்ளனர்.

2005 ஆம் ஆண்டு நடைபெற்ற புலமைப்பரிசில் பரீட்சையில் எமது பாடசாலையில் தொண்ணூற்றாறு (96) மாணவர்கள் சித்தி பெற்று யாழ். மாவட்டத்திலும் வடக்கு கிழக்கு மாகாணத்திலும் முதன்மைச் சாதனை படைத்துள்ளனர். ஏனைய மாணவர்களும் சராசரி மட்டமேல் நிலைப் புள்ளியைப் பெற்றுள்ளமை இவ்வாண்டு குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

| மாணவர் பெயர் | புள்ளிகள் | பாடசாலை நிலை | மாவட்ட நிலை | தேசிய மட்டம் |
|---|---|---|---|---|
| 1. மி. துமிலன் | 169 | 1 | 3 | - |
| 2. மோ.மோகனலக்ஷன் | 164 | 2 | 8 | - |

இத்தகைய சாதனைகளைப் படைத்துப் பாடசாலையின் பெயரை மேலோங்கச் செய்த ஒவ்வொரு மாணவ மணிகளையும் மனம் நிறைந்து பாடசாலைச் சமூகம் சார்பாகப் பாராட்டுவதோடு எதிர்காலத்தில் மேலும் பல உயர்வுகள் பெறமனம் நிறைந்து வாழ்த்துகின்றோம். பரீட்சையில் தோல்வியைக் கண்டு துவண்டிருக்கும் ஏனைய மாணவர்களையும் முயற்சி திருவினையாக்கும் என்ற தத்துவக் கோட்பாட்டிற்கிணங்க முயற்சியுடன் வெற்றி பெறுக என்று வாழ்த்துகின்றோம்.

இம்முறை எமது பாடசாலையில் புலமைப்பரிசில் பரீட்சையில் 150 புள்ளிகளுக்கு மேலாகப் பெற்ற 15 மாணவர்கள் தங்கப்பதக்கம் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர். இத்தகைய ஆற்றலை வளர்ப்பதில் தன் சுகம் மறந்து பொறுப்பேற்று வழிப்படுத்திய ஆசிரியர்களின் பணிகள் சிறப்பாகப் பாராட்டப்பட வேண்டியதொன்றாகும். இவ்வெற்றி 5 ஆண்டுகளாக ஊக்குவித்து உயர்வு காட்டிய இப் பாடசாலையின் சகல ஆசிரியர்களின் ஒட்டுமொத்தமான பணியாக அமைந்ததென்றால் அது மிகையாகாது. எவ்வாறாயினும் குறிப்பாகப் பிரத்தியேகச் செயற்பாடுகளில் தம்மை அர்ப்பணிப்புடன் செயலாற்றிய செல்வி தா. குணரஞ்சினி அவர்கள், திருமதி மு. சுகிர்தா அவர்கள், திருமதி சி. விஜயகோபால் அவர்கள், செல்வி க. குவேனி அவர்கள், திரு. வே. அன்பழகன் அவர்கள், திருமதி த. தர்மரத்தினம் அவர்கள் சிறப்பாகப் பாராட்டத்தக்கவர்கள்.

அடுத்த ஆண்டின் படிநிலை மேம்பாட்டிற்காகத் தரம் 4 ஆசிரியர்கள் அனைவரும் இவ்வாண்டும் சிறப்பான சேவையை வழங்கியுள்ளமைக்காகப் பாராட்டுகின்றேன். குறிப்பாக யுனிசெப் செயல் திட்டத்தில் பின் தங்கிய மாணவர்களை வழிப்படுத்தும் விசேட கல்விச் செயல் வகுப்புக்களை நடாத்திவரும் செல்வி சீ. சுப்பிரமணியம் அவர்களையும் பாராட்டுகின்றோம். பாடசாலையில் நடாத்தப்பட்ட தரம் ஐந்திற்கான புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சைக்கு 150க்குக் கூடிய புள்ளிகளை எடுத்த மாணவர்களுக்கு பரிசில் வழங்கிய அன்பர்களின் விபரம் 2005.

**2005 தரம் 5 புலமைப் பரிசில் மாதிரிப் பரீட்சை:**

**அன்பளிப்பு செய்தவர்கள் விபரம்:**

01. வி. ஜனகசங்கர், பழைய மாணவன்
02. திரு. மு. குமாரரத்தினம், 7/1, 1ம் ஒழுங்கை, பிறவுண் வீதி.
03. திரு. மி. மிகுந்தன், விரிவுரையாளர்.
04. சாரங்கா நகைமாடம்
05. திரு. ரங்கநாதன்
06. திரு. இ கதிரேசபிள்ளை
07. திரு. பாஸ்கரன்
08. திரு. கலைராஜ்
09. திரு. ரவீந்திரக் குருக்கள்
10. யோகராசா ஸ்ரீராம் எலக்ரோனிக்
11. திரு. சிவகுமார்
12. திரு. கு. விஜயகுமார், தொழில்நுட்ப உத்தியோகத்தர்
13. திரு. உதயகுமார்
14. திரு. த. மோகனதாஸ், ஆசிரியர்
15. திரு. ஜெகமோகன், ஜெகன் களஞ்சியம்.
16. திரு. சி. பரிமளகாந்தன்
17. திரு. மோகனேஸ்வரன்
18. திரு. த. சிவநாதன்
19. திரு. க. வேலாயுதம்
20. திரு.ச. சிறிக்குமார்
21. திரு. மு. ஞானந்திரன்
22. திரு. சி. குலேந்திராஜா

**புலமைப் பரிசில் பரீட்சையில் சித்திய டைந்த மாணவர்களின் பெற்றோர்களால் வழங்கப்படும் ஆசிரிய கௌரவிப்பு:**

வருடந்தோறும் தம் குழந்தைகளின் நல் வாழ்விற்கு வழிகாட்டிய ஆசிரியர்களை சித்தி யடைந்த மாணவர்களின் பெற்றோர்கள் ஒன்றுசேர்ந்து ஒரு குழுவாகப் பரஸ்பர புரிந்து ணர்வுடன் கூடியதான நல்லுறவை வளர்த் தலும், ஊக்குவித்தலுமான இத்தகைய ஒன்று கூடலை ஏற்பாடு செய்து பாராட்டுதலும் உபசரித்தலும் வழக்கம்.

2005 ஆம் ஆண்டின் பாராட்டுக் குழுவின் தலைவரான திரு. நா. மோகனேஸ்வரன் அவர்களையும், செயலாளரான திரு. பி. ஆறு முகதாஸ் அவர்களையும், அவர்களோடு இணைந்த ஏனைய பெற்றோர்களையும் பாட சாலைச் சமூக நல்லுறவை மேம்படுத்திய மைக்காக வாழ்த்துவதோடு எமது மனம் நிறைந்த நன்றியையும் தெரிவித்துக் கொள் கின்றோம். இத்தகைய செயற்பாடு பாட சாலையை முன்னிலைப்படுத்தும் நோக்கு டையதாகவும் அதன்மூலம் ஆசிரியர்கள் பய னடையக் கூடியதாகவும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

**பரிசளிப்பு விழாக்குழு:**

**தலைவர்:**

திரு. வே. ஞானகாந்தன், அதிபர்.

**செயலாளர்:**

திரு. சு. தியாகலிங்கம், உபஅதிபர்.

**பொருளாளர்:**

திருமதி ஸ்ரீ. கிருஸ்ணபாலா, பகுதித்தலைவர்.

**உறுப்பினர்கள்:**

01. திருமதி கா. நாகராசா
02. திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்
03. திருமதி ல. மகாலிங்கம்
04. திரு. பொ. ஜெகானந்தராசா
05. திருமதி நி. கிருபாகரன்
06. செல்வி தா. குமரஞ்சினி
07. திருமதி எம். பி. ஆர். கனகரட்னம்
08. திருமதி லோ. சிவகுமாரன்

பரிசுத்தின வைபவம் ஒவ்வொரு ஆண் டும் வருட இறுதியில் கொண்டாடப்பட்டு வருவது வழக்கமாகி வருகின்றது. புதிய கல்வித்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டமை யைத் தொடர்ந்து பரிசில் வழங்கும் வியூகம் ஆரம்ப வகுப்புகளில் மாறுபட்டு வந்தமை யால் புதிய கல்வித்திட்டத்தில் உள்ளவர் களுக்கு அதிக எண்ணிக்கையில் பரிசில்கள் வழங்கி வருகின்றோம்.

புதிய கல்வித்திட்டத்தின் பிரகாரம் மாண வர்களை அடைவு மட்டத்திற்கு மேல் நிலை யில் உள்ளவர். அடைவு மட்டத்தில் உள்ள வர், அடைவு மட்டத்தை நெருங்கியுள்ளவர் என்ற மூன்று நிலைகள் கருத்தில் கொள்ளப் படுகின்றன.

இவர்களுக்கான பரிசில்களின் பெரும் பகுதியை உதயன் பத்திரிகை இயக்குநர் திரு. ஈ. சரவணபவன் அவர்கள் தமது தந்தை யார் அமரர் இளையதம்பி ஈஸ்வரபாதம் அவர்களின் ஞாபகார்த்தமாக வருடந்தோறும் வழங்கி வருகின்றார். எமது பாடசாலை மாண வர்களின் கல்வி அபிவிருத்தியில் அவர் காட் டும் அக்கறையும் ஆர்வமும் போற்றுதற்குரி யது.

**புலமைப் பரிசில் நிதியம்:**

புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகளைப் பெற்ற மாணவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கும் திட்டத்தை அறிமுகப் படுத்தியுள்ளோம். அதற்காகப் புலமைப் பரிசில் ஞாபகார்த்த நிதியம் அமைக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

**புலமைப்பரிசில் நிதியத்திற்கு அன்பளிப்புச் செய்தோர் விபரம்:**

01. அமரர் கிருஸ்ணபிள்ளை நல்லதம்பி, நல்லதம்பி செல்லம்மா அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*திரு. திருமதி வில்வநாதன் குடும்பம்*
*ரூபா 10,000/=*

02. அமரர் நல்லையா இராசகுமாரன் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*திரு. இ. இராசேந்திரம் அவர்கள்*
*ரூபா 10,000/=*

03. அமரர் பாக்கியலட்சுமி ஆறுமுகம் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*திருமதி ரேணுகா ஸ்ரீகுமாரன் அவர்கள்*
*ரூபா 10,000/=*

04. அமரர் சு.பாலசுப்பிரமணியம் ஐயா அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*பிரம்மஸ்ரீ பா. முரளிதரக் குருக்கள் அவர்கள்*
*ரூபா 10,000/=*

05. அமரர் காசிப்பிள்ளை அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*திரு. கா. தவராசா அவர்கள்*
*ரூபா 10,000/=*
*முன்னாள் அதிபர், யாழ். இ. ஆ. பாடசாலை*

06. அமரர் சு.சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*கலாநிதி சு. சிவநாயகமூர்த்தி அவர்கள்*
*முன்னாள் பிரதிக் கல்விப் பணிப்பாளர், மருதனார்மடம் (கனடா)*
*ரூபா 10,000/=*
வழங்குவோர் :
*சு. தியாகலிங்கம், உபஅதிபர்.*

07. அமரர் செல்லப்பா சதாசிவம் அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*திரு. ச. திருச்செல்வராஜன் அவர்கள்*
*சதாஸ் மோட்டோர்ஸ், யாழ்ப்பாணம்.*
*ரூபா 10,001/=*

08. அமரர் திருமதி பேரம்பலம் பாக்கியலட்சுமி அவர்களின் ஞாபகார்த்தப் பதக்கங்கள் ஐந்து (முன்னாள் ஆசிரியை) வழங்குவோர்:
*அன்னாரின் பிள்ளைகள்*
*ரூபா 200,000/=*

09. அமரர் திருமதி சி.கந்தையா அவர்கள் (முன்னாள் ஆசிரியை) ஞாபகார்த்தப் பதக்கம் வழங்குவோர்:
*திரு. கந்தையா அவர்கள் (கணவர்)*
*ரூபா 50,000/=*

அடுத்த ஆண்டுமுதல் இந்நிதிக்கான பதக்கங்கள் வழங்கப்படவுள்ளன.

10. இவ்வாண்டு வழங்கப் பெற்ற பதக்கங்கள்:

1. *யூசிமாஸ் நிறுவனத்தின் சார்பில் அதன் யாழ்ப்பாண இணைப்பாளர் திருமதி R.பாஸ்கரன் அவர்களால்*
*தலா ரூபா 5000 பெறுமானமுடைய பதக்கங்கள் 2*
*ரூபா 3000 பெறுமானமுடைய பதக்கம் 1*
2. *'வேணி களஞ்சியம் பிரபல வர்த்தகர் திருவாளர் க. கங்கைவேணியன் அவர்களால்*
*ரூபா 3000 பெறுமானமுடைய பதக்கம் 1*

இவ்வாண்டு சிறப்புப் பதக்கங்கள் வழங்கிய சமூகநோக்கும், பாடசாலை நேயமும் மிக்க இவ்விருவரையும் மனம் நிறைந்து பாராட்டுகின்றோம்.

## தமிழ் மன்றம்:

**தலைவர் :** செல்வி தா. குணரஞ்சினி
**செயலாளர்:** திருமதி சி. விஜயகோபால்
**பொருளாளர்:** திருமதி த. தர்மரட்ணம்

தமிழ் மன்றமானது மாணவர்களின் தமிழ் அறிவை விருத்தி செய்வதற்காக பல்வேறு முயற்சிகள் மேற்கொண்டு வருவதுடன் பேச்சுத்திறன், வாசிப்புத்திறன், எழுத்துத்திறன், ஆக்கத்திறன் போன்றவற்றை மன்றத்தினூடாகவும், நற்சிந்தனை வாயிலாகவும், தமிழ் மொழியை விருத்தி செய்து வருதல் குறிப்பிடத்தக்க அம்சமாகும். பாடசாலை மட்டத்தில் தமிழ்த்தினப் போட்டிகளை நடாத்தி ஒவ்வொரு தரங்களிலும் பரிசில்கள், சான்றிதழ்கள் வழங்கப்பட்டும் வருகின்றன. பாடசாலை மட்டப் போட்டிகளில் முதல் இடங்களைப் பெறும் தரம் நான்கு, தரம் ஐந்துகளில் இருந்து கோட்ட, வலய, மாவட்டப் போட்டிகளில் பங்குபற்றி இவ்வாண்டு தேசிய மட்டத்திலும் சாதனைகள் படைத்துள்ளனர்.

### தமிழ்த்தினப் போட்டி - 2005:

**கோட்ட மட்டம்:**

| | |
|---|---|
| **ஆக்க எழுத்து:** | |
| சோ. திரியம்பகி | 1ம் இடம் |
| **வாசிப்பு:** | |
| மோ. சோபிதன் | 1ம் இடம் |
| **பேச்சு:** | |
| க. பவந்தினி | 1ம் இடம் |
| **பாஓதல்:** | |
| மோ. மோகனலக்ஷன் | 2ம் இடம் |
| **இசையும் அசைவும்:** | |
| ந. வேதாசினி | 3ம் இடம் |
| **கதை கூறல்:** | |
| ந. திலக்ஷன் | 2ம் இடம் |
| **தனிநடனம்** | |
| சி. சாரங்கன் | 2ம் இடம் |

**வலய மட்டம்:**

| | |
|---|---|
| **ஆக்க எழுத்து:** | |
| சோ. திரியம்பகி | 1ம் இடம் |
| **பேச்சு:** | |
| க. பவந்தினி | 3ம் இடம் |
| **கதை கூறல்:** | |
| ந. திலக்ஷன் | 3ம் இடம் |
| **தனிநடனம்** | |
| சி. சாரங்கன் | 2ம் இடம் |

**மாவட்ட மட்டம்:**

| | |
|---|---|
| **ஆக்க எழுத்து:** | |
| சோ. திரியம்பகி | 1ம் இடம் |

**மாகாண மட்டம்**

| | |
|---|---|
| **ஆக்க எழுத்து:** | |
| சோ. திரியம்பகி | 1ம் இடம் |

**அகில இலங்கை:**

| | |
|---|---|
| **ஆக்க எழுத்து:** | |
| சோ. திரியம்பகி | 1ம் இடம |

## இந்து மன்றம் :

**தலைவர்:**

திரு. சு. தியாகலிங்கம் ( உபஅதிபர்)

**செயலாளர்:**

திருமதி நி. கிருபாகரன்

**பொருளாளர்:**

திரு. கா. முத்துக்கிருஷ்ணன்

வாணிவிழா முதன்மை விருந்தினராக திருவாளர் லெ. கெங்காதரன் ஆச்சாரியார் அவர்கள் கலந்து சிறப்பித்தமை பாராட்டுக்குரியதாகும்.

சைவப்பாரம்பரிய விழுமியங்களையும், பண்பாடுகளையும் தன்னகத்தே இணைத்து செயற்படும் இப்பாடசாலையின் சகல செயற்பாடுகளிலும் காலத்திற்குக்

காலம் மரபுகள் பேணப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். இந்து மன்றச் செயற்பாடுகளாக வாரந்தோறும் வெள்ளிக்கிழமைகளில் சமய வழிபாடும், கூட்டுப்பிரார்த்தனையும் குருபூசைக் கொண்டாட்டங்களும் நவராத்திரி வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன. எமது பாடசாலைக்கு அருகாமையில் அமைந்துள்ள கொண்டலடி விநாயகப் பெருமானுக்கு வருடந்தோறும் ஆனி உத்தரத்தைப் பெருவிழாவாக எடுத்துவருகின்றோம். வாணி விழாக் காலத்தின்போது, சமய அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் சமயப்பேச்சு, பண்ணிசை, மாலை கட்டல், தோரணம் பின்னுதல், சகலகலாவல்லி மாலை முற்றோதல், கோலம் போடுதல் ஆகிய போட்டிகளை நடாத்தி வெற்றியீட்டியோருக்குப் பரிசில்கள் சான்றிதழ்கள் வழங்கி ஊக்குவித்தும் சமயக் கலைகளைப் போற்றியும் வருகின்றோம். இப்பணியில் அனைத்து ஆசிரியர்குழாமும் வழிகாட்டிகளாகத் திகழ்கின்றனர்.

**சைவபரிபாலன சபைத் தேர்வு - சமய பாடப் பரீட்சை**

செல்வி ர. அபிராமி – வெள்ளிப் பதக்கம் தரம் – 2

**விளையாட்டுத்துறை:**

**இணைச்செயலாளர் :**

திரு. சு. தியாகலிங்கம் (உபஅதிபர்)
திருமதி மு. சுகிர்தா

**பொருளாளர்:**

திருமதி ஸ்ரீ. கிருஷ்ணபாலா (பகுதித்தலைவர்)

மாணவர்கள் சிறந்த உடல்நலம் பெற்றவர்களாகவும், திடகாத்திரமான உடலுறுதி உடையவர்களாகவும், ஒழுக்கமும் நற்பண்பும் மிக்கவராகவும் திகழ வேண்டும் என்ற உத்வேகத்துடன் விளையாட்டுத்துறையினர் செயலாற்றி வருகின்றனர். உடலுக்கும் உள்ளத்திற்கும் மகிழ்வை ஏற்படுத்தும் விநோத விளையாட்டுக்களும், உடல் ஆரோக்கியத்திற்கு ஏற்ற சிறுவர் பூங்கா விளையாட்டுக்களும் மாணவர்களின் பயன்பாட்டிற்குப் பெரிதும் உதவி வருகின்றன.

பாடசாலை மட்டத்தில் முதன்மை நிலை ஒன்று, முதன்மைநிலை இரண்டு, மூன்று என்ற வகையில் இரு இல்லமெய்வல்லுநர் போட்டி நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. இந்நிகழ்வுகளின் சிறப்பு அம்சமாக இரு பாண்ட் வாத்திய அணிவகுப்பும் பாடசாலையின் அதிகமான மாணவர்கள் பங்குகொள்ளும் உடற்பயிற்சி கண்காட்சியும் மனதைத்தொடவல்லன. இவற்றினைப் பயிற்றுவிப்பவர்களாகத் திகழும் திருமதி சு. முத்துக்குமாரு, செல்வி சீ. சுப்பிரமணியம், செல்வி க. தர்சினி, திரு. எஸ். துரைராசா, திருமதி வி. சக்திவேல் ஆகிய ஆசிரியர்கள் மற்றும் அவர்களுடன் இணைந்த அனைத்து ஆசிரியர்களும் பாராட்டத்தக்கவர்கள். மேலும் 2005 ஆம் ஆண்டிற்கான மென்பந்துச் சுற்றுப் போட்டியை வருடந்தோறும் ரூபி ஜுவலறி ஆதரவில் நடாத்தி அவர்களுக்கான வெற்றிக் கிண்ணங்களும் வழங்கப்பட்டு வருகின்றன.

**இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2005**

முதன்மை நிலை 2, 3

**முதன்மை விருந்தினர்**

திரு. த. அருணகிரிராஜா
பிரதிக்கல்விப் பணிப்பாளர் திட்டமிடல்

**மெய்வல்லுநர் தலைவன்**

செல்வன் மோ. மோகனலக்ஷன்

**மெய்வல்லுநர் தலைவி**

செல்வி வி. சுபஜெனனி

**முதன்மை வீரர்கள்**

தரம் 3 ஆண்: ம. தனுஷன்
பெண்: க. பத்மினி

தரம் 4 ஆண்: சி. சிவகாந்
பெண்: க. பவந்தினி

முதன்மை நிலை - I

**முதன்மை விருந்தினர்:**
*திருமதி ச. காங்கேயன்*
(கோட்டக் கல்விப்பணிப்பாளர், நல்லூர்)

**மெய்வல்லுநர் தலைவன்:**
*செல்வன் சோ. மதுஷன்*

**மெய்வல்லுநர் தலைவி:**
*செல்வி மு. காயத்திரி*

**முதன்மை வீரர்கள்:**

தரம் I ஆண்: கௌ. சங்கமன்
சீ. ஷஜீகன்
சு. செந்தூரன்
பெண்: செ. துவாரகா

தரம் II ஆண்: மு. யாதவன்
பெண்: மோ. சுகாசினி
அ. சாரங்கி
இ. மாதினி

**யாழ் / வலய மெய்வல்லுநர் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்கள்:**

செல்வன் : ஜெ. சஜீவன்
சி. சிவகாந்
சி. மதுஷன்
ச. கோகுலன்

செல்வி : வி. சுபஜெனனி
ஜெ. ஜானுசா

**சதுரங்கம்:**

இலங்கை சதுரங்க சம்மேளனத்தினால் நடாத்தப்பட்ட போட்டியில் (CHESS FEDERATION OF SRI LANKA)

**வெற்றிபெற்றவர்கள்:**

*செல்வி வி. கு. குணசிகா*
*செல்வன். த. தனுசியன்*

**யாழ் வலயமட்ட சதுரங்கப் போட்டியில் 15 வயதிற்குட்பட்ட பிரிவில் வெற்றியைத் தட்டிக் கொண்ட வீரர்கள்**

செல்வன்: ஸ்ரீ. லக்ஷமன்
த. தனுசியன்
செல்வி: கு. குணசிகா

**மினிரெனிஸ் (Tennis)**

செலிங்கோ வங்கியின் அனுசரணையுடன் நடைபெற்ற சிறுவர்களுக்கான வலய மட்டரெனிஸ் போட்டியில் 24 மாணவர்கள் பங்குபற்றி பெண்கள் அணியினர் மூன்றாம் இடத்தைப் பெற்றுக்கொண்டனர்.

**பயிற்றுவிப்பாளர்:**
*திரு. ஜோசப் சகாஜராஜா*
(இணைப்பாளர் யாழ்வலயம்)

**தனி இடத்தைத் தட்டிக் கொண்டவர்கள்:**
*செல்வி ச. ஜஸ்வரியா*
*செல்வி ப. மதுஷா*

இவர்கள் கொழும்பில் நடைபெறும் போட்டி நிகழ்ச்சியில் கலந்துகொள்வதற்காக விசேட பயிற்சியை மேற்கொண்டு வருதல் குறிப்பிடத்தக்கது.

**2005 மென்பந்து சுற்றுப்போட்டி:**

**முதன்மை விருந்தினர்:**
*திரு. ச. சிறிக்குமார் அவர்கள்*
(முன்னாள் ஆசிரியர் யாழ் இந்து ஆரம்ப பாடசாலை)

**அணிகள்:**

*முத்துக்குமார் அணி*
*கனகரத்தினம் அணி*

**சகலதுறை ஆட்டக்காரர்:**

*கி. மதுஷன்*

**ஆட்டநாயகன்**

*ர. வித்தியாசங்கர்*

**சிறந்த பந்து வீச்சாளர்:**

*த. கோபிராஜ்*

**சிறந்த துடுப்பாட்ட வீரர்:**

*உ. பிரணவன்*

**சிறந்த தடுப்பாளர்:**

*மோ. சோபிதன்*

**வெற்றிக்கிண்ணம் தட்டிக்கொண்ட அணி:**

*கனகரத்தினம் அணி*

**பயிற்றுவிப்பாளர்:**

*திரு. வே. அன்பழகன்*
*திரு. அன்ரனிவுறுணோ*

**வலைப் பந்து:**

பெண்களுக்கான வலைப் பந்து பயிற்று விக்கப்பட்டுப் போட்டி நடாத்தப்பட்டது. கனகரத்தினம் அணிக்கும் முத்துக்குமார் அணிக்குமிடையே நடைபெற்ற இப் போட்டியில் முத்துக்குமார் அணி வெற்றிக் கிண்ணத்தைத் தட்டிக் கொண்டது.

**ஆங்கில மன்றம்:**

**தலைவர்:**

*திருமதி ரீ. கிருஷ்ணபாலா* (பகுதித் தலைவர்)

**செயலாளர்:**

*செல்வி ஓ. சுமதி*
*திருமதி இ. மணிவண்ணன்*

**பொருளாளர்:**

*திருமதி சி. அம்பிகைபாகன்*

**பிரதமவிருந்தினர்:**

*திருமதி சிவகுருநாதன் அவர்கள்*
(ஓய்வுபெற்ற ஆங்கில ஆசிரியை யா.இ. க)

ஆங்கிலக் கல்வியானது கற்றல், கற்பித்தல் தொழிற்பாட்டில் சர்வதேச ரீதியாக எவ்வளவு முக்கியமாக அமைந்துள்ளது என்பதைக் கருத்தில் கொண்டு தரம் ஒன்று தொடக்கம் வாய்மொழி ஆங்கிலமாக பரிணமித்து மிளிர்கின்ற அதேவேளை இலக்கண இலக்கியங்கள் மூலமாகவும் ஆங்கிலம் வினைத்திறன் உடையது மன்றத்தினூடாக காலை மாணவர்கள் நற்சிந்தனை மூலமாகவும், ஆங்கிலப்பாடல் நாடகம், உரையாடல் போன்றனவற்றை மன்றச் செயற்பாட்டு ரீதியாகவும் மாணவர்களுக்கு வளர்த்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

வருடந்தோறும் ஆங்கில தினப் போட்டிகள் நடாத்தி மாணவர்களுக்கு பரிசில்கள், சான்றிதழ்கள், வழங்கி வருகின்றனர். நவீன கற்பித்தல் சாதனங்களுடன் ஆங்கிலத் துறையை வளம்படுத்தலுக்கு ஏற்ற வாய்ப்பான வள நிரம்பல்கள் உள்ளே வந்து கொண்டேயிருப்பது பிரகாசத்திற்கான அறிகுறியாகும். அத்துடன் கோட்டமட்ட, வலய மட்ட நிலைகளில் மாணவர்கள் சாதனை படைத்து வருகின்றனர். துறைநோக்கி உழைக்கும் ஆசிரியர்களை இச்சந்தர்ப்பத்திலே பாராட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

**ஆங்கில தினப்போட்டியில் வெற்றியீட்டியோர்:**

**தரம் 3**

**கோட்டமட்டம்:**

Recitation

| | |
|---|---|
| *ம. திருசிகா* | 1 |
| *ர. சகிஷ்னா* | 2 |

Copy Writing

A. அபிராமி 1

**வலய மட்டம்:**

Recitation

M. திருசிகா 3

**தரம் - 4**

**கோட்ட மட்டம்:**

Copy Writing

M. பவித்திரா 1

**வலய மட்டம்:**

Copy Writing

M. பவித்திரன் 1

**தரம் - 5**

**கோட்ட மட்டம்:**

Recitation

மோ. சோபிதன் 1

மோ. மோகனலக்ஷன் 3

**கவின்கலை மன்றம்:**

**தலைவர்:**

திருமதி ரூ. கிருஸ்ணபாலா

**செயலாளர்:**

திருமதி வி. சந்திரசேகரன்

**பொருளாளர்:**

திருமதி நி. கிருபாகரன்

**இணை ஆசிரியர்கள்:**

செல்வி ஓ. சுமதி

திரு. சி. துரைராசா

செல்வி க. குவேனி

திருமதி இ. மணிவண்ணன்

திருமதி கா. நாகராசா

திரு. வே. அன்பழகன்

திரு. க. இராசலிங்கம்

அழகியற் செயற்பாடுகளை வினைத் திறன் உடையதாக மாற்றும் வகையில் கவின் கலை மன்றம் செயலாற்றி வருகின்றது. வாணி விழா, பெற்றோர் தினவிழா, தமிழ்த் தின விழா, பரிசளிப்புவிழா, பண்ணிசை, ஆங்கில தின விழாக்களில் இடம்பெறும் கலை நிகழ்ச்சிகளை கவின்கலை மன்றம் முன் னின்று நடத்தி விழா சிறப்புற அமைய தன்னாலான பணியாற்றி வருகின்றமை குறிப் பிடத்தக்க அம்சமாகும். மன்றம் இனிதே செயற்பட எனது வாழ்த்துக்களை அளிப்பதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

**கணனித்துறை:**

**இணை ஆசிரியர்கள்:**

திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்

திருமதி ஓ. ஜெகதீசன்

எமது பாடசாலை ஆரம்ப பிரிவைக் கொண்டிருந்தாலும் கூட கணனித்துறையில் அதிகமான மாணவர்கள் பயிற்சிபெற்று வரு கிறார்கள். மாணவர்களின் பயன்பாட்டிற்கு உரியனவாக உள்ளமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இந்த வகையில் இவ்வாண்டில் தரம் 5 ல் கல்வி பயிலும் 240 மாணவர்களும் , தரம் 4 இல் கல்வி பயிலும் 227 மாணவர் களும் தரம் 3 இல் கல்வி பயிலும் 163 மாண வர்களும் இதுவரை கணனிப் பயிற்சியின் ஆரம்ப நிலையை நிறைவுசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

**கற்பித்தல் சாதனை ஆக்கப்போட்டி:**

**கல்வியற் கல்லூரி விசேட பரிசு பெற்றோர்**

திரு. வே. அன்பழகன்

திரு. அன்ரன் புறூனோ

**மாணவர் முதல்வர் குழு:**

**ஆசிரிய ஆலோசகர்:**

திரு. சு. தியாகலிங்கம்

**பொறுப்பாசிரியர்கள்:**

திருமதி ரூ. கிருஸ்ணபாலா
திருமதி ல. மகாலிங்கம்
திரு. பொ. ஜெகானந்தராசா
திரு. கா. முத்துக்கிருஷ்ணன்
திரு. செ. ஸ்ரீநாகேஸ்வரன்
திருமதி மு. சுகிர்தா
திருமதி கா. நாகராசா
திருமதி வ. சோமசுந்தரம்
